Way to Success - Fast Revision - Tamil
Best Wishes For your Exams

# அருஞ்சொற்கள்

## 1. அமுதஊற்று

- கனி - பழம்
- தென்னன் - பாண்டியன்
- எண்தொகை - எட்டுத்தொகை
- மாண்பு - பெருமை
- முந்துற்றோம் - முழங்குகின்றோம்
- தும்பி - வண்டு
- துய்ப்பது - கற்பது, தருதல்
- மேவலால் - பொருந்துதல், பெறுதல்
- ஈண்டு - இங்கு
- ஆழி - கடல்
- இணை - ஈடு

## 2. உயிரின் ஓசை

- மயலுறுத்து - மயங்கச் செய்
- ப்ராண-ரஸம் - உயிர்வளி
- லயத்துடன் - சீராக
- நனந்தலை உலகம் - அகன்ற உலகம்
- நேமி - வலம்புரிச்சங்கு
- கோடு - மலை
- தூஉய் - தூவி
- விரிச்சி - நற்சொல்
- சுவல் - தோள்
- மா - திருமகள்
- பருகி - குடித்து
- வலன் ஏர்பு - வலப்பக்கமாக எழுந்து
- மூதூர் - பழைய ஊர்
- வீ - மலர்கள்
- பெண்டிர் - பெண்கள்
- ஆய்மகள் - ஆயர் பெண்
- கோவலர் - இடையர்
- தடக்கை - பெரிய கை
- வழிபடுகின்றோம் - போற்றுகின்றோம்
- நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
- கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்

## 3. கூட்டாஞ்சோறு

- அருகுற - அருகில்
- எழுதல் - நிற்றல்
- செப்பல் - சொல்லுதல்
- அசைஇ - இளைப்பாறி
- கடும்பு - சுற்றம்
- ஆரி - அருமை
- வயிரியம் - கூத்தர்
- இறடி - தினை
- அல்கி - தங்கி
- கழை - மூங்கில்
- நோய் - துன்பம்
- இன்மை - வறுமை
- முகமன் - ஒருவரை நலம் வினவிக்கூறும் விருந்தோம்பல் சொற்கள்
- நரலும் - ஒலிக்கும்
- படுகர் - பள்ளம்
- வேவை - வெந்தது
- பொம்மல் - சோறு
- அல் - இரவு
- செப்பம் - பொருத்தம்
- பாக்கம் - சிற்றூர்
- விழுப்பம் - சிறப்பு
- வேளாண்மை - உதவி

## 4. நான்காம் தமிழ்

- சுடினும் - சுட்டாலும்
- மாளாத - தீராத
- மாயம் - விளையாட்டு
- விசும்பு - வானம்
- ஊழி - யுகம்
- ஊழ் - முறை
- ஆர்தருபு - வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த
- பீடு - சிறப்பு, பெருமை
- ஈண்டி - செறிந்து, திரண்டு
- உள்ளீடு - உள்ளே இடப்பட்டது
- தண்பெயல் - குளிர்ந்த மழை

For Doubts & Clarifications, contact us on 7397774508
For more free materials visit www.waytosuccess.org

## 5. மணற்கேணி

- தார் - மாலை
- முடி - தலை
- முனிவு - சினம்
- தமர் - உறவினர்
- நுவன்ற - சொல்லிய
- என்னா - அசைச்சொல்
- கேள்வியினான் - நூல் வல்லான்
- கேண்மையினான் - நட்பினன்
- அகத்து உவகை - மனமகிழ்ச்சி
- மீனவன் - பாண்டிய மன்னன்
- கவரி - சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)
- நீபவனம் - கடம்பவனம்

## 6. நிலா முற்றம்

- அசும்பிய - ஒளிவீசும்
- பண்டி - வயிறு
- முச்சி - தலையுச்சிக் கொண்டை

## 7. விதைநெல்

- கடுகிச் செல் - விரைந்து செல்
- தொழுது - வணங்கி
- புலன் - பொறி
- நுகத்தடி - நடுவுநிலை மரம்
- கார் - மேகம்
- கொழு - கலப்பையிரும்பு
- சுண்ணம் - நறுமணப்பொடி
- காருகர் - நெய்பவர்(சாலியர்)
- தூசு - பட்டு
- துகிர் - பவளம்
- வெறுக்கை - செல்வம்
- நொடை - விலை
- பாசவர் - வெற்றிலை விற்போர்
- ஓசுநர் - எண்ணெய் விற்போர்
- கிழி - துணி
- பனுவல் - நூல்
- எண்மர் - எட்டுப்பேர்
- வடிவாகி - உருவமாகி
- மனுவாணை - எழுதி வைத்த ஆணை
- அரற்றுவன - ஒலிப்பன
- கலக்குண்பன - கலக்கமடைவன
- புனல் - நீர்
- வடு - புண்
- கா - காடு
- வரை - மலை
- வேய் - மூங்கில்
- மருளுதல் - பயங்கொள்ளல்
- குலம் - கூட்டம்
- கயல் - மீன்
- கடிந்து - சினம் கொள்ளல்
- மைந்தர் - மகன்
- மண்ணீட்டாளர் - சிற்பி
- மண்ணுள் வினைஞர் - ஓவியர்

## 9. அன்பின் மொழி

- சேக்கை - படுக்கை
- யாக்கை - உடல்
- பிணித்து - கட்டி
- வாய்ந்த - பயனுள்ள
- இளங்கூழ் - இளம்பயிர்
- தயங்கி - அசைந்து
- காய்ந்தேன் - வருந்தினேன்
- படலை - மாலை
- துணர் - மலர்கள்
- கொம்பு - கிளை
- புழை - துளை
- கான் - காடு
- தேம்ப - வாட
- அசும்பு - நிலம்
- உய்முறை - வாழும் பூமி
- ஓர்ந்து - நினைத்து
- குடிந்து - விலக்கி
- உவமணி - மணமலர்

Way to Success Fast Revision - Tamil

Way to Success - Fast Revision - Tamil
Best Wishes For your Exams

# இலக்கணக்குறிப்பு

## பொதுவான குறிப்புகள்

| | |
|---|---|
| **1. செய்யுளிசை (அ) இசைநிறையளபெடை:**<br>❖ நெடிலை அடுத்து 'இ' தவிர ஏனைய உயிர்எழுத்து வரும்.<br>❖ சொல் ஈரசைச்சீராக இருக்கும். | தொழாஅர்,<br>படூஉம்,<br>வரூஉம் |
| **2. சொல்லிசை அளபெடை :**<br>❖ 'இ' என்னும் உயிர் எழுத்தில் மட்டும் முடியும்.<br>❖ இ என்ற எழுத்தை நீக்கினால் ஓரசைச்சீராக இருக்கும். | தழீஇ, ஓரீஇ |
| **3. இன்னிசை அளபெடை :**<br>❖ நெடிலை அடுத்து பெரும்பாலும் உயிர்எழுத்து வரும்.<br>❖ மூவசைச் சீராக இருக்கும். | வளர்க்குறூ**உம்** |
| **4. பெயரெச்சம் :**<br>❖ அ, கிறு, கின்ற, உம் என்ற சொற்களைக் கொண்டு முடிபவை பெரும்பாலும் பெயரெச்சங்கள் ஆகும்.<br>❖ எச்சங்களை அடுத்து வரும் சொற்கள் பெயர்ச்சொற்களாக இருக்க வேண்டும். | போற்றி**ய** புலவன்,<br>போற்று**கிற** புலவன்<br>போற்று**கின்ற** புலவன்,<br>போற்று**ம்** புலவன் |
| **5. வினையெச்சம் :**<br>❖ பெரும்பாலும் இ, உவில் முடிந்தால் பெயரெச்சம் (எ.டு) போற்றி, உண்டு.<br>❖ சிறுபான்மை 'அ'வில் முடியலாம். (எ.டு) இரட்ட | எய்தி, பருகி, கொண்டு,<br>தொழுது, நோக்கி, |
| **6. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் :**<br>❖ இறுதி குறைந்த வினைச்சொல்<br>❖ எதிர்மறைப் பொருளைத் தரும்.<br>❖ 'ஆ' என்றும் முடியும் சொற்களுக்கு, அடுத்தாற்போல இருக்கும் சொல் பெயர்ச்சொல்லாக இருக்கும். | தீராத காதல்,<br>அணையா விளக்கு,<br>வேண்டாக்குப்பை,<br>ஓடாக்குதிரை |
| **7. தொழிற்பெயர் :**<br>❖ தல், அல், கை, அம் முதலிய 19 விகுதிகளில் முடிவன தொழிற்பெயர்களாகும். | வாழ்க்கை, ஒரால்,<br>அற்றம், கோறல், தருதல் |
| **8. வியங்கோள் வினைமுற்று :**<br>❖ வாழ்த்தல், வேண்டல், விதித்தல், வைதல் என்ற பொருள்களில் வரும்.<br>❖ க, இய, இயர் (சில இடங்களில் இ) என்று விகுதி வந்தால், அது வியங்கோள் வினைமுற்று விகுதி | வாழ்க,<br>வாழிய,<br>வாழியர் |
| **9. உரிச்சொற்றொடர் :**<br>❖ சால, உறு, தவ, நனி, கூர், தட, மா, கடி, மல்லல் என்ற மிகுதிப்பொருளை உணர்த்தும் சொற்கள்<br>❖ பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் வரும். | நனிகடிது, கூர்ம்படை,<br>தவப்பிஞ்சு, கடிநகர்,<br>மாவலி |
| **10. வினைத்தொகை :**<br>❖ இத்தொகையில் இரண்டு சொற்களே இருக்கும்.<br>❖ முதலில் வினைச்சொல், இரண்டாவது பெயர்ச்சொல் | ஒழுகுநீர் ஒழுகிய,<br>ஒழுகுகின்ற, ஒழுகும் என மூன்று காலத்தையும் உணர்த்தும். |

For Doubts & Clarifications, contact us on 7397774508
For more free materials visit www.waytosuccess.org

| | |
|---|---|
| **11. உவமைத்தொகை :**<br>❖ போன்ற என்ற சொல் மறைந்து வருதல்.<br>❖ முதலில் இருக்கும் சொல் உவமைச்சொல்லாக இருக்கும்.<br>❖ இரண்டாவது சொல் பொதுவான சொல்லாக இருக்கும். | தாமரைக்கண்கள் (தாமரை போன்ற கண்கள்)<br>மலரடி (மலர் போன்ற அடி)<br>இதில் தாமரை, மலர் உவமைச்சொல் |
| **12. உம்மைத்தொகை :**<br>❖ இரண்டு அல்லது மூன்று சொற்கள் வரும்.<br>❖ இரண்டு சொற்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொல்லாக இருக்கும்.<br>❖ அவற்றின் இடையில் 'உம்' என்ற சொல் மறைந்திருக்கும். | மாடுகன்று (மாடும் கன்றும்)<br>சேர சோழ பாண்டியர் (சேரரும் சோழரும் பாண்டியரும்) |
| **13. பண்புத்தொகை :**<br>❖ குணம், உருவம், நிறம், எண், சுவை என்ற பண்புப்பெயர்களோடு பெயர்ச்சொற்கள் சேர்ந்து வந்தால் அது பண்புத்தொகை.<br>❖ ஆகிய என்ற உருபு மறைந்து வரும். மை விகுதி வெளிப்படும் (பெரும்பாலும்) | சேவடி,<br>செங்கண் |
| **14. உருவகம் :**<br>❖ முதலில் இருக்கும் சொல் பொதுவான சொல்லாக இருக்கும்.<br>❖ இரண்டாவது சொல் உவமைச்சொல்லாக இருக்கும்.<br>❖ உவமை மாறினால் அது உருவகம் | கைம்மலை,<br>கண்ணீர் வெள்ளம்,<br>பசிக்கயிறு,<br>தங்கத்திமிங்கலம் |
| **15. ஏவல் வினைமுற்று :**<br>❖ மின் வந்தால் ஏவல் வினைமுற்று<br>❖ 'பு'வில் முடியும் சொற்கள் ஏவல் வினைமுற்று (செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்) | செல்லுமின்,<br>துறத்தி,<br>சொல்லுமின்,<br>ஓங்குபு |
| **16. வினையாலணையும் பெயர் :**<br>❖ ஒன், அன், அர், ஆர், ஓர், ஓடு, பான் என்று விகுதிகள் கொண்டு வினைமுற்று போல் காணப்படும்.<br>❖ ஆனால் பெயர்ச்சொல்லாக பயன்படுத்தப்பட்டிருக்கும். | வந்தவர்,<br>போனவர்,<br>அறிகில்லாதவர்,<br>கூடினர் |
| **17. அடுக்குத்தொடர் :**<br>❖ பிரித்தால் பொருள் தரும்<br>❖ ஒரே சொல் பலமுறை அடுக்கி வரவேண்டும். | புதிது புதிது,<br>தினம் தினம் |
| **18. எண்ணும்மை :**<br>❖ தொடர்புடைய இரு சொற்கள் வரும்.<br>❖ 'உம்' வெளிப்பட்டு வரும். | மலர்தலும் கூம்பலும்,<br>பேரோடும் புகழோடும் |
| **19. இருபெயரொட்டுப் பண்புத்தொகை :**<br>❖ இரு சொற்களாக வரும்<br>❖ முதலில் சிறப்புப்பெயரும், அடுத்து பொதுப்பெயரும் வரும். ஆகிய என்ற உருபு மறைந்து வரும். | தமிழ்மொழி<br>தமிழ் - சிறப்புப்பெயர்<br>மொழி - பொதுப்பெயர்<br>அன்புநெறி, சாரைப்பாம்பு, தைத்திங்கள் |



Way to Success - Fast Revision - Tamil

## பாடப்பகுதி இலக்கணக்குறிப்புகள்

| | |
|---|---|
| இயல் 1 | ❖ முந்துற்றோம் - தன்மைப்பன்மை வினைமுற்று<br>❖ கன்னிக்குமரி - உருவகம்<br>❖ வாழ்த்துவம் - தன்மைப்பன்மை வினைமுற்று<br>❖ மண்ணுலகம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை<br>❖ குடித்து - வினையெச்சம்<br>❖ யாண்டும் - முற்றும்மை<br>❖ காக்க - வியங்கோள் வினைமுற்று<br>❖ துய்ப்பதால், கண்டதால், மேவலால் - தொழிற்பெயர்கள்<br>❖ முகிழ்ந்த, எழுப்ப - பெயரெச்சங்கள்<br>❖ நறுங்கனி, செந்தமிழ், செந்தாமரை - பண்புத்தொகை |
| இயல் 2 | ❖ கேட்டனம் - தன்மைப்பன்மை வினைமுற்று<br>❖ உறுதுயர் - வினைத்தொகை<br>❖ கைதொழுது - மூன்றாம் வேற்றுமைத்தொகை<br>❖ தடக்கை - உரிச்சொல் தொடர்<br>❖ வளைஇ - சொல்லிசை அளபெடை<br>❖ மாஅல் - இசைநிறை அளபெடை<br>❖ நன்னர் நன்மொழி - ஒருபொருட் பன்மொழி ('நர்' விகுதி பெற்ற பண்புப்பெயர்)<br>❖ பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை - முரண்தொடை<br>❖ அசைத்த, எழுந்த, தொடுத்த - பெயரெச்சங்கள்<br>❖ பருகி, கொண்டு, தொழுது, நோக்கி - வினையெச்சங்கள்<br>❖ பாடுகிறோம், கூறுகிறோம், வழிபடுகிறோம் -தன்மைப் பன்மைவினைமுற்றுகள்<br>❖ மூதூர், பெரும்பெயல், முதுபெண்டிர், நல்லொளி, கொடுங்கோல், நெடுங்காலம், நன்மொழி, - பண்புத்தொகைகள் |
| இயல் 3 | ❖ நன்மொழி - பண்புத்தொகை<br>❖ வருக - வியங்கோள் வினைமுற்று<br>❖ பரிந்து - வினையெச்சம்<br>❖ விருந்து - பண்பாகுபெயர்<br>❖ அசைஇ, கெழீஇ - சொல்லிசை அளபெடைகள்<br>❖ பரூஉக், குரூஉக்கண் - செய்யுளிசை அளபெடைகள்<br>❖ சேந்த - பெயரெச்சம்<br>❖ எய்தி - வினையெச்சம்<br>❖ எய்தாப்பழி - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்<br>❖ உலகு - இடவாகு பெயர்<br>❖ ஊழையும் - உயர்வு சிறப்பும்மை<br>❖ கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடைகள்<br>❖ கெடுப்பார், வேண்டுபவர், உஞற்றுபவர் - வினையாலணையும் பெயர்கள்<br>❖ வியத்தல், நோக்கல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல், எழுதல் - தொழிற்பெயர்கள் |



Way to Success - Fast Revision - Tamil

| | |
|---|---|
| இயல் 4 | ❖ வாளால் - மூன்றாம் வேற்றுமை விரி<br>❖ சுடினும் - எச்ச உம்மை<br>❖ மாளாத - எதிர்மறைப் பெயரெச்சம்<br>❖ மீளா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்<br>❖ பார்ப்பன் - தன்மை ஒருமை வினைமுற்று<br>❖ ஊழ் ஊழ் - அடுக்குத் தொடர்<br>❖ ஊழியும் - எச்ச உம்மை<br>❖ மூழ்கி, ஈண்டி, தோன்றி - வினையெச்சம்<br>❖ செந்தீ, தண்பெயல் - பண்புத்தொகைகள்<br>❖ உந்துவளி, வளர்வானம் - வினைத்தொகைகள் |
| இயல் 5 | ❖ கேள்வியினான் - வினையாலணையும் பெயர்<br>❖ கழித்த, பொழிந்த - பெயரெச்சங்கள்<br>❖ மொழிந்து, வழிந்து - வினையெச்சங்கள்<br>❖ உளன் - 'உள்ளன்' என்பதன் இடைக்குறை<br>❖ சொல் நிறையும் - மூன்றாம் வேற்றுமைத் தொகை<br>❖ பிரியா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்<br>❖ தணியாத - எதிர்மறைப் பெயரெச்சம்<br>❖ மன்னோ - அசைச்சொல்<br>❖ தவம் தருமம் - உம்மைத்தொகை<br>❖ எந்தாய் - எம் தந்தாய் என்பதன் குறுக்கம்<br>❖ கோபத்தீ - உவமைத்தொகை<br>❖ மறையவர் ஒழுக்கம்- ஐந்தாம் வேற்றுமைத்தொகை<br>❖ அல்லேம், வந்தேம் - தன்மைப்பன்மை வினைமுற்றுகள்<br>❖ காடனுக்கும் கபிலனுக்கும் - எண்ணும்மை<br>❖ நல்நிதியே, பெருந்தகை - பண்புத்தொகைகள்<br>❖ தமிழ் அறியும், கவி தொடுத்தேன் - இரண்டாம் வேற்றுமைத் தொகைகள் |
| இயல் 6 | ❖ செம்பொன்,சிறுகிண்கிணி,பைம்பொன் - பண்புத்தொகை<br>❖ அசும்பிய,கட்டிய - பெயரெச்சம்<br>❖ குண்டலம் குழைகாதும் - எண்ணும்மை<br>❖ ஆடுக - வியங்கோள் வினைமுற்று<br>❖ உருசோலை - வினைத்தொகை<br>❖ போதவிழ் - இரண்டாம் வேற்றுமைத்தொகை<br>❖ அவிழ்பொய்கை - வினைத்தொகை<br>❖ தேன்பிழி - இரண்டாம் வேற்றுமைத்தொகை<br>❖ அழியா அழகு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்<br>❖ நெடுந்திரை - பண்புத்தொகை<br>❖ இறந்திலன் - எதிர்மறை வினைமுற்று<br>❖ காண் - ஏவல் வினைமுற்று<br>❖ போல - உவம உருபு<br>❖ கிடந்து - வினையெச்சம் |



Way to Success Fast Revision - Tamil

| | |
|---|---|
| இயல் 7 | ❖ பொன்ஏர் - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை<br>❖ தொழுது - வினையெச்சம்<br>❖ மாமலர் - உரிச்சொற்றொடர்<br>❖ நுகத்தடி - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை<br>❖ படியானை, உருபுனல் - வினைத்தொகைகள் |
| இயல் 8 | ❖ தெருப்புழுதி - ஏழாம் வேற்றுமைத்தொகை<br>❖ கட்டும் - செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று<br>❖ சட்டம் - வடிவப் பண்புப்பெயர்<br>❖ பொன்னினும் - உயர்வு சிறப்பு உம்மை<br>❖ அவனும் நானும்- எண்ணும்மை<br>❖ இறந்த - பெயரெச்சம்<br>❖ சட்டம் - பண்புப்பெயர்<br>❖ பயில்தொழில் - வினைத்தொகை<br>❖ சொல்லா, இல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்<br>❖ கம்பன், பாரதி, பாரதிதாசன் - உம்மைத்தொகைகள்<br>❖ ஆக்கல், அளித்தல், அழித்தல் - தொழிற்பெயர்கள்<br>❖ எழுந்து, அறிந்து, இறந்து - வினையெச்சங்கள்<br>❖ எழுதுக, கொள்க, குரைக்க - வியங்கோள் வினைமுற்றுகள்<br>❖ தருவேன், தட்டுவேன் - தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்றுகள்<br>❖ காலக்கழுதை, அறப்பணி, பதவிவாள் - உருவகங்கள்<br>❖ துடைத்தேன், அடித்தேன், பொருத்தினேன் -தன்மைப் பன்மை வினைமுற்றுகள்<br>❖ மண்வீடு - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |
| இயல் 9 | ❖ பொற்காலம் - உவமைத்தொகை<br>❖ கைவைத்து - இரண்டாம் வேற்றுமைத்தொகை<br>❖ புலம்புவார் - வினையாலணையும் பெயர்<br>❖ அந்தோ - அசைச்சொல்<br>❖ திருந்திய - பெயரெச்சம்<br>❖ ஒலித்து, குவித்து - வினையெச்சங்கள்<br>❖ மெய்முறை - வேற்றுமைத்தொகை<br>❖ கணீர் - கண்ணீர் என்பதன் இடைக்குறை<br>❖ தடவிலா, இல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்<br>❖ காக்கென்று - ‘காக்கவென்று’ என்பதன் தொகுத்தல் விகாரம்<br>❖ இருந்தாலும், செத்தாலும் - இழிவு சிறப்பு உம்மைகள்<br>❖ தலைக்கனம், மனச்சுமைகள் - ஆறாம் வேற்றுமைத்தொகைகள்<br>❖ காய்மணி, உய்முறை, செய்முறை - வினைத்தொகைகள்<br>❖ செங்கற்கள், நல்லறம் - பண்புத்தொகைகள்<br>❖ கைமுறை - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |

Way to Success
Fast Revision - Tamil

## பகுபத உறுப்பிலக்கணம்

### இயல் - 1 அமுதஊற்று

**முகிழ்ந்த** = முகிழ் + த்(ந்) + த் + அ
முகிழ் - பகுதி
த்(ந்) - 'த்' – 'ந்' ஆனது சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**வாழ்த்துவோம்** = வாழ்த்து + வ் + ஓம்
வாழ்த்து - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி

### இயல் - 2 உயிரின் ஓசை

**உராய்ந்து** = உராய் + த்(ந்) + த் + உ
உராய் - பகுதி,
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**பாடுகிறோம்** = பாடு + கிறு + ஓம்
பாடு - பகுதி
கிறு - நிகழ்கால இடைநிலை
ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

**கூறுகிறோம்** = கூறு + கிறு + ஓம்
கூறு - பகுதி
கிறு - நிகழ்கால இடைநிலை
ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

**வழிபடுகின்றோம்** = வழிபடு + கின்று + ஓம்
வழிபடு - பகுதி
கின்று - நிகழ்கால இடைநிலை
ஓம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

**பொழிந்த** = பொழி + த்(ந்) + த் + அ
பொழி - பகுதி
த் - சந்தி, 'த்' 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**அசைத்த** = அசை + த் + த் + அ
அசை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**பொறிந்த** = பொறி + த் + த் + அ
பொறி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**நிமிர்ந்த** = நிமிர் + த்(ந்) + த் + அ
நிமிர் - பகுதி
த் - சந்தி, 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**நோக்கி** = நோக்கு + இ
நோக்கு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

### இயல் - 3 கூட்டாஞ்சோறு

**உரைத்த** = உரை + த் + த் + அ
உரை – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

**கெடுப்பார்** = கெடு + ப் + ப் +ஆர்
கெடு - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
ஆர் -படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

**வந்து** = வா(வ) + த்(ந்) + த் + உ
வா – பகுதி 'வ' எனக் குறுகியது விகாரம்
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**பரிந்து** = பரி+த்(ந்)+த்+உ
பரி – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**எழுதல்** = எழு + தல்
எழு – பகுதி
தல் – தொழிற்பெயர் விகுதி

**எய்தி** = எய்து + இ
எய்து - பகுதி
இ - வினையெச்ச விகுதி

**போகி** = போகு + இ
போகு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

Way to Success - Fast Revision - Tamil

**மலைந்து** = மலை+ த்(ந்) +த் + உ
மலை - பகுதி
த் - சந்தி ‘ந்’ ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**பொழிந்த** = பொழி + த்(ந்) + த் + உ
பொழி - பகுதி
த் - சந்தி ‘ந்’ ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**கேளாது** = கேள் + ஆ + து
கேள் - பகுதி
ஆ - எதிர்மறை இடைநிலை
து - ஒன்றன்பால் வினைமுற்றுவிகுதி

**எய்துவர்** = எய்து + வ் + அர்
எய் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
அர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

**வருக** = வா (வரு) + க
வா - பகுதி
‘வரு’ எனத் திரிந்தது விகாரம்
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

## இயல் - 4 நான்காம் தமிழ்

**அறுத்து** = அறு + த் + த் + உ
அறு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**பார்ப்பன்** = பார் + ப் + ப் + அன்
பார் - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
அன் - வினைமுற்று விகுதி

**தோன்றி** = தோன்று + இ
தோன்று - பகுதி
இ -வினையெச்ச விகுதி

**கிளர்ந்த** =கிளர்+ த்(ந்)+ த்+அ
கிளர் - பகுதி
த் - சந்தி
த்(ந்) - ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**ஈண்டி** = ஈண் + ட் +இ
ஈண் - பகுதி
ட் - இறந்தகால இடைநிலை
இ - வினையெச்ச விகுதி

## இயல் - 5 மணற்கேணி

**தணிந்தது** = தணி+த்(ந்)+த்+அ+து
தணி - பகுதி
த்(ந்) - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - சாரியை
து - படர்க்கை வினைமுற்று விகுதி

**அமர்ந்தான்** = அமர்+த்(ந்) +த் +ஆன்
அமர் - பகுதி
த்(ந்) - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - படர்க்கை ஒருமை ஆண்பால் வினைமுற்று விகுதி

**வழிந்து** = வழி+த்(ந்)+த்+உ
வழி - பகுதி
த்(ந்) - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**தொடுத்தேன்** = தொடு+த் +த்+ஏன்
தொடு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**வாசித்தான்** = வாசி+த் +த்+ஆன்
வாசி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - படர்க்கை ஒருமை ஆண்பால் வினைமுற்று விகுதி

**கண்டு** = காண்(கண்) + ட் +ட் +உ
காண் - பகுதி, கண் எனக் குறுகியது விகாரம்
ட் - சந்தி
ட் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**கழிந்த** = கழி+த்(ந்)+த்+அ
கழி - பகுதி
த்(ந்) - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**கண்டாய்** = காண்(கண்) + ட் + ட் + ஆய்
காண் - பகுதி, ‘கண்’ எனக்குறுகியது விகாரம்
ட் - சந்தி
ட் - இறந்தகால இடைநிலை
ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

Way to Success
Fast Revision - Tamil

## இயல் - 6 நிலா முற்றம்

**பதிந்து** = பதி + த்(ந்) + த் + உ
பதி - பகுதி
த் - சந்தி(ந் ஆனது விகரம்)
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**கடந்து** =கட+ த்(ந்) + த் + உ
கட - பகுதி
த் - சந்தி(ந் ஆனது விகாரம்)
த் - இறந்த கால இடைநிலை
உ - வினையச்சவிகுதி

**ஆடுக** = ஆடு + க
ஆடு - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

**கண்டு** =காண்(கண்) + ட் + உ
காண் - பகுதி(கண் என ஆனது விகாரம்)
ட் - இறந்த கால இடைநிலை
உ - வினையச்சவிகுதி

**உறங்குகின்ற** = உறங்கு+ கின்று+ அ
உறங்கு - பகுதி
கின்று - நிகழ்கால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**கலந்து** = கல+த்(ந்)+த்+உ
கல - பகுதி
த்(ந்) - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

## இயல் - 7 விதைநெல்

**தொழுது** = தொழு + த் + உ
தொழு - பகுதி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**கீறுவோம்** = கீறு + வ் + ஓம்
கீறு - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஓம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி

**தூண்டி** = தூண்டு + இ
தூண்டு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

**செய்வார்** = செய் + வ் + ஆர்
செய் - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**வைப்பார்** = வை + ப் + ப் + ஆர்
வை - பகுதி
ப் - சந்தி
ப் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**ஒறுப்பார்** = ஒறு + ப் + ப் + ஆர்
ஒறு - பகுதி
ப் - சந்தி
ப் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## இயல் - 8 பெருவழி

**துடைத்தேன்** = துடை + த் + த் + ஏன்
துடை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**அடித்தேன்** = அடி + த் + த் + ஏன்
அடி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**பொருத்தினேன்** = பொருத்து +த் +இன்+ஏன்
பொருத்து - பகுதி
த் - இறந்தகால இடைநிலை
இன் - சாரியை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்ற விகுதி

**மயங்கிய** = மயங்கு+இ(ன்)+ய்+அ
மயங்கு - பகுதி
இ(ன்) - இறந்தகால இடைநிலை; 'ன்' புணர்ந்து கெட்டது
ய் - உடம்படுமெய்
அ - பெயரெச்ச விகுதி

**மிகுத்தேன்** = மிகு + த் + த் + ஏன்
மிகு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**எழுந்து** = எழு + த்(ந்) + த் + உ
எழு - பகுதி
த் - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

Way to Success Fast Revision Tamil

**மாறுவர்** = மாறு + வ் + அர்
மாறு - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
அர் - படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதி

**எழுதுக** = எழுது + க
எழுது - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

**அறிவேன்** = அறி + வ் + ஏன்
அறி - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**வைப்பேன்** = வை + ப் + ப் + ஏன்
வை - பகுதி
ப் - சந்தி
ப் - எதிர்கால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

## இயல் - 9 அன்பின் மொழி

**வைத்து** = வை + த் + த் + உ
வை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**புலம்புவார்** = புலம்பு + வ் + ஆர்
புலம்பு - பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆர் -படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

**அறியாது** = அறி + ய் + ஆ + த் + உ
அறி - பகுதி
ய் - சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்துகெட்டது
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**விரிந்தன** = விரி + த்(ந்) + த் + அன் + அ
விரி - பகுதி
த் - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
அ - பெயரெச்ச விகுதி

**வாய்ந்த** = வாய் + த்(ந்) + த் + அ
வாய் - பகுதி
த் - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

**பிணித்து** = பிணி + த் + த் + உ
பிணி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - பெயரெச்ச விகுதி

**வாழ்ந்தேன்** = வாழ் + த்(ந்) + த் + ஏன்
வாழ் - பகுதி
த் - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**அறியேன்** = அறி + ய் + ஆ + ஏன்
அறி - பகுதி
ய் - சந்தி
ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**வைக்கிறாள்** = வை + க் + கிறு + ஆள்
வை - பகுதி
க் - சந்தி
கிறு - நிகழ்கால இடைநிலை
ஆள் - பெண்பால் வினைமுற்று விகுதி

**ஒலித்து** = ஒலி + த் + த் + உ
ஒலி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி